இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

## PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffana, Sri Lanka. Tel: 021 - 222 - 2378 Fax: 021 - 222 - 9041, ISSN 1391 - 7633

மலர் : 140

இதழ் : 11

பக்கங்கள் : 08

திகதி : 19.06.2016

விலை : 20.00

உள்ளே...

03ம் பக்.. ஜுன் மாதம் திரு இருதய ஆண்டவர் திருவிழா நமக்கெல்லாம் பெருவிழா

04ம் பக்.. புதுப்பித்தலுக்கு ஓர் அழைப்பு பகுதி - II பாகம் 07

05ம் பக்.. கியூடெக் கரித்தாஸ் வாழ்வாதார உதவிப்பிரிவு

06ம் பக்.. யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை பின்னணி, தோற்றம், வளர்ச்சி

# நல்லவர்கள், பண்புள்ளவர்களால்தான் உலகை உருவாக்கமுடியும்! வல்லவர்களாலல்ல!!

## பாடசாலை சமூகம் மத்தியில் ஆயரின் அறிவுரை






கடந்த ஜுன் மாதம் 8ஆம் திகதி யாழ்.மரியன்னை பேராலயத்தில் எமது ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்கள் தனதுபெயர்கொண்டதிருநாளை பாடசாலை சமூகத்தோடு திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடியபோது தனது மறையுரையில் மேற்கண்ட வாறு தெரிவித்தார். மாணவப் பருவம்தான் நல்லபண்புகளை வளர்த்துக்கொள்ள உகந்த பருவம் என்பதை மாணவர் களுக்கு நினைவூட்டிய ஆயர் அவர்கள் இப்பருவத்தில் மாணவர்களாகிய உங்களுக்கு தரப்படுகின்ற சந்தர்ப்பங்களை இயன்றவரை பயன்படுத்திக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வளரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அடுத்தவரின் வாழ்வுக்கு சுவையைக் கொடுக்கின்ற, அவர்கள் வாழ்வு களங்கப்படாமல் பாதுகாக்கின்ற உப்புக்களாகவும், அடுத்தவர் வாழ்வின் இருள்களை அகற் றும் ஒளிகளாகவும் திகழ ஒவ் வொரு மாணவனும் மாண வியும் தமது பாடசாலைப் பருவத்தில் தம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஆயர் கேட்டுக் கொண்டார்.

பாடசாலைப் பருவத்தில் இத்தகைய பண்புகளை வளர்க்கத் தவறுகின்றவர் கள்தான் பின்னர் வாழ்விலும் தவறு செய்பவர்களாக மாறி,

(8ம் பக்.பார்க்க...)

## "சமூகத் தீமைகளைக் கட்டுப்படுத்தும் வல்லமை அன்பியங்களுக்கு உண்டு"

### மாதகல் பங்கின் மேய்ப்புப்பணி மாநாட்டு கருத்தமர்வில் யாழ். குருமுதல்வர்

இளவாலை மறைக்கோட்ட மேய்ப்புப்பணிக் கருத்தமர்வு வரிசையில் 05.06.2016 அன்று மாதகல் பங்கினைத் தரிசித்து அவர்களுக்கான கருத்தமர் வினை மேற்கொண்ட பின்னர், இடம்பெற்ற குழு ஆய்வின் தொகுப்புரையினை செவி மடுத்து, அதற்கான கருத் துரைகளை எடுத்துரைத்த போதே யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 1994ஆம் ஆண்டு இடம்பெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டின் சிறப்புச் செயற்பாடாக எல்லாப் பங்குகளிலும் அன்பிய வாழ்வு முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் பல இடங்களில் அது

(8ம் பக்.பார்க்க...)

## யாழ்.மறை மாவட்டத்திற்கு புதிய குரு அருட்சகோ. அலின் கருணாகரன்



வளலாயை பிறப்பிட மாகவும், மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தைச் சேர்ந்த வர்களும், திக்கத்தை தற் போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி. சிங் கராசா - செசிலியம்மா தம்பதிக ளின் மகனாகிய அருட்சகோ. அலின் கருணாகரன் வருகின்ற 23.06.2016 அன்று யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர். பேரருட்திரு. யஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர் களால் குருவாக திருநிலைப் படுத்தப்படவுள்ளார். 10.03.1984 இல் பிறந்த இவர் தனது ஆரம்ப

(8ம் பக்.பார்க்க...)

## கிறிஸ்து அனுபவமில்லாமல் புதுப்பித்தல்பணி பலன் கொடுக்காது

### மேய்ப்புப்பணி வளவாளர்களுக்கான கருத்தமர்வில் யாழ் ஆயர்






யாழ் மறைமாவட்டத்தில் புதிய ஆயர் அவர்களின் முன்மொழிவிற்கு இணங்க, மேற்கொள்ளப்படவுள்ள மேய்ப் புப்பணி மாநாட்டிற்கு முன் ஆயத்தமாக பங்குத்தளங் களைத் தரிசித்து, கருத்தமர் வுகளை நடாத்துவதற்கு உதவியாக, வளவாளருக்கு வலுவூட்டும் செயலமர்வு யாழ் ஆயர் இல்லத்தில் 11.06.2016 அன்று காலை 9.30 மணி யளவில் யாழ். குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் தலைமையில் ஆரம்பமானது. இச் செயலமர் விற்குத் தமது சிறப்புக் கருத்துக்களை வழங்கிய யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தெரி விக்கையில், இடம்பெற விருக்கும் மேய்ப்புப்பணி மாநாட்டிற்கான ஆயத்த செயற்பாடுகளில் நீங்கள் அனைவரும் உற்சாகத்துடன் ஈடுபடுவது பாராட்டிற்குரியது.

(8ம் பக்.பார்க்க...)

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# வயோதிபர், நோயாளர், அங்கவீனர்களின் மாண்பு மதிக்கப்படவேண்டும்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டின் ஒரு நிகழ்வாக, வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான யூபிலி விழா அண்மையில் திருத்தந்தை தலைமையில் உரோமையில் நடைபெற்றது.

இவ்விழாத் திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை இன்றைய உலகு வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மட்டில் கொண்டுள்ள அலட்சியப்போக்கு கவலையளிக்கிறது என்று குறிப்பிட்டார்.

செல்வாக்குப்பெற்றவர்கள், பணம்படைத்தவர்கள் சிலரின் மகிழ்வுக்கும் அமைதிக்கும் வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இடையூறாக இருப்பதாக அவர்கள் உணர்கிறார்கள் என்று குறிப்பிட்ட திருத்தந்தை இவர்களும் அன்புகூரப்படவேண்டியவர்களளென்றும், இவர்களில், வாழ்வின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்ளத் தவறுபவர்கள், துன்பங்களையும் குறைகளையும் ஏற்கத் தவறுகின்றவர்கள் என்றும் கூறினார்.

ஒருவரின் நெருக்கடி நிறைந்த சூழலில், இவர்கள் ஏற்க முடியாத பொருளாதாரச் சுமை என்றும் கூறப்பட்டு, கூடிய விரைவில் இவர்களை ஒழித்து விடுவது நல்லது என்றுகூட சில நோயாளர்களால் சொல்லப்படுகின்றது என்றுரைத்த திருத்தந்தை, சமூகத்தால் ஒதுக்கப்பட்ட நோயாளர், பெண்கள் மற்றும் பலவீனர்களை இயேசு அதிகம் அன்புகூர்ந்தார் என்றும் கூறினார்.

திருத்தந்தையின் உரையிலிருந்து வயதானவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மட்டில் அவருக்குள்ள கவலையை ஆதங்கத்தை உணரக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வேளையில், இப்படியானவர்கள் மட்டில் எமது நிலை எவ்வாறு உள்ளது எனபதையும் சிந்திக்கத்தான் வேண்டும்.

“வீட்டினுடைய பெயர் “அன்னை இல்லம்” ஆனால் அன்னையோ வயோதிப மடத்தில்” என்று எங்கோ ஒரு பட்டிமன்றத்தில் கேட்டது இப்போது ஞாபகம் வருகிறது. வயோதிபர், அங்கவீனர்கள், மாற்றுத்திறனாளிகள் என இன்று எமது சமூகத்தில் ஏராளமானவர்கள் எமது இரக்கத்தை எதிர்பார்த்து ஏங்குகிறார்கள் என்பதை எம்மில் பலரும் உணருவதில்லை. மாறாக, “காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறதாம்” என்ற கதைகள் எம்மில் மலிந்து காணப்படுகின்றன. அங்கவீனர்கள், இயலாதவர்கள் மட்டில் இரக்கம் காட்டுவதற்குப் பதிலாக அவர்களைக் கேலி செய்வதும், துன்புறுத்துவதும், அவர்களின் உணர்வுகளை நோகச் செய்வதும் பலருக்கு பொழுதுபோக்காகவே தெரிகிறது.

நாடகங்களிலும், களியாட்ட நிகழ்வுகளிலும் வயோதிபர்களாக, அங்கவீனர்களாக வேடங்கள் தரித்து அவர்கள் நிஜமாக அனுபவிக்கின்ற தாங்கமுடியாத வேதனைகளை நடித்துக்காட்டி எல்லோரையும் சிரிக்கவைத்து தாம் நகைச்சுவை மன்னர்கள் என்று பேரெடுக்கின்ற பலர் தமது செயல் இத்தகையோரின் துன்பங்களை தாம் எத்தனை மடங்கு அதிகரிக்கிறோம் என்பதை அறியாமலிருப்பது கவலைக்கிடம்தான்.

எமது பிரதேசங்களில் பொது அலுவலகங்கள், ஆலயங்கள் அமைக்கின்றபோது வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் அங்கவீனர்கள் இங்கு வரத்தேவையில்லை என்பதுபோல அவர்கள் இக்கட்டிடங்களுக்குள் செல்வதற்கான எதுவித வசதிகளும் செய்யப்படாமல் அவற்றை அமைப்பது இத்தகையோர் மட்டிலுள்ள பாராமுகத்தை தெளிவாகக் காட்டுகிறது. ஆயிரம் பங்குமக்களைக் கொண்ட ஓர் ஆலயத்தில் ஓர் அங்கவீனர் அல்லது இயலாதவர் இருந்தாலும் கூட அவரும் அவ்வாலயத்திற்குள் இலகுவாக நுழைவதற்கான வசதிகளும், அவர்களுக்குப் பொருத்தமான மலசலகூட வசதிகளும் செய்யப்படவேண்டியது இன்றியமையாததாகும்.

இறைவன் எம்மை ஒரு குறையுமில்லாமல் படைத்ததற்காக நாம் அவருக்கு நன்றி கூறும் ஒரே வழி குறைகளோடு இருப்போர் மட்டில் அன்பும் கரிசனையும் இரக்கமும் காட்டுவது தவிர வேறில்லை. குறைகளோடு வாழ்வோரால் எம்மைத்தேடி வரமுடியாது. நாம் அவர்களைத் தேடிச் சென்று துணைபுரிய வேண்டும்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டு எமக்கு விடுக்கும் சவால் இது.

– ஆசிரியர் –

# “இளையோரின் திறந்த மனப்பாங்கு பாராட்டுதற்குரியது! புதுப்பித்தலுக்கு அவசியமானது!!

## இளவாலையில் யாழ் குருமுதல்வர்

யாழ்மறைமாவட்டமேய்ப்புப்பணி மாநாட்டிற்கான பங்கு மக்களுக்கான கருத்தமர்வு 12.06.2016 அன்று இளவாலைப் பங்கில் இடம்பெற்றது. இறைமக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் அனைவரும் புதுப்பித்தலுக்குரிய செய்தியை பெற்றுக்கொள்ளும் முகமாகவும் இளவாலைப் பங்கின் மூன்று ஆலயங்களிலும் ஞாயிறு திருப்பலியைத் தொடர்ந்து தனித்தனியான மூன்று குழுக்களைக் கொண்ட வளவாளர்களால் நடாத்தப்பட்டது. புனித யூதாததேயு ஆலயத்திற்குரிய கருத்தமர்வை பங்குத்தந்தை அருட்பணி.ம. யேசுரட்ணம் அவர்களும், புனித அன்னாள் ஆலயத்திற்கான கருத்தமர்வை அருட்பணி சந்திரபோஸ் அவர்களும், புனித யாகப்பர் ஆலயத்திற்கான செயற்பாட்டை அருட்பணி மங்களதாஸ் அவர்களும் ஆர்வமுடன் நெறிப்படுத்தினர்.

இக்கருத்தமர்வின் மூலம் இறுதியாக இடம்பெறும் யாழ்மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டிற்கான மக்களின் கருத்துரைகளைப் பெற்றுக்கொள்ளவும் அதற்காக மக்கள் எத்தகைய நிலைகளில் தம்மைத் தயார்ப்படுத்தவும் வேண்டும் என்ற கருத்துரைகளை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் மூன்று ஆலயங்களுக்கும் வழங்கினார். இறுதியாக புனித யாகப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற குழு ஆய்வுரைகளின் தொகுப்புகளுக்கு தமது கருத்தினை வழங்கிய குருமுதல்வர், புதிதாய் வாழும் நோக்கினை இலக்காகக் கொண்ட இம் மகநாட்டுச் செயற்பாடுகளுக்கான கருத்தமர்வில் இளையோர் தமக்கே உரிய வெளிப்படையான தன்மையில் திறந்த மனப்பாங்குடன் தவறுகளையும், மாறுதல் களையும் முன்வந்து சுட்டிக் காட்டியமை வரவேற்புக்குரியது. அத்துடன் அவர்களின் ஆற்றலும் முழுமையாக வெளிப்பட வேண்டும். இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவது அவசியம் எனவும் குறிப்பிட்டார். மூன்று ஆலயங்களிலும் திருப்திகரமான மக்கள் பங்கேற்று கருத்தமர்வு சிறப்புற இடம்பெற ஒத்துழைப்பு நல்கியமை மாற்றத்தை நல்லமுறையில் ஏற்படுத்துவதில், ஆர்வமாய் உள்ளனர் என்பதையும் பொதுநிலையினரின் ஆன்மீக விசுவாசப் புதுப்பித்தலிலும் சமூக மேம்பாட்டிலும் பங்குத்தந்தையர்களும், துறவிகளும், மக்களுடன் அதிக ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும் என்ற மக்களின் கருத்தும் அழுத்தமாக முன்வைக்கப்பட்டது. இறுதியாக 12.00 மணியளவில் கருத்தமர்வு இனிதே நிறைவு பெற்றது.

**தகவல்:**
**S.M. வுளோறன்ஸ்**

# பகைவர்க்காகச் செபிப்பது நம் இதயங்களைக் குணமாக்கும்

பகைவர்க்காகச் செபிப்பது நம் இதயங்களைக் குணமாக்கும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். பகைவர்களை மன்னிக்குமாறு இயேசு தம் சீடர்களிடம் கூறிய, மத்தேயு நற்செய்தி வாசகத்தை (மத்.5,43-48) மையப்படுத்தி, திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை, நாம் பகைவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் மற்றும் நம்மைத் துன்புறுத்துவோருக்காகச் செபிக்க வேண்டுமென இயேசு சொல்வதை விளக்கினார்.

சட்டத்தின் எழுத்துக்களை விட அன்பு மிகவும் தாராளம் உடையது என்பதற்கு இயேசு பல எடுத்துக்காட்டுகளை நமக்கு வழங்கியிருக்கிறார் என்றும், கொலை செய்யாதே என்பது, உனது சகோதரரை அவமதியாதே அல்லது சினங் கொள்ளாதே என்பதாகும் என்றும் கூறிய திருத்தந்தை, உங்கள் அங்கியை எடுத்துக் கொள்ள விரும்பினால், மேலுடையையும் கொடுங்கள் என்ற போதனை நம் இதயங்களைக் குணமாக்க உதவுகின்றது என்றார்.

# இன்று உலகில் பத்து நாடுகளில் மட்டுமே சண்டை இடம்பெறவில்லை

இவ்வுலகம் மிகுந்த ஆபத்தான இடமாக மாறி வருகிறது என்றும், இன்று உலகில் பத்து நாடுகள் மட்டுமே சண்டைகளே இன்றி உள்ளன என்றும், உலகளாவிய அமைதிக் குறியீட்டை வெளியிட்ட ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆண்டுதோறும் அமைதியான நாடுகள் பற்றி ஆய்வு நடத்திவரும் உலக பொருளாதார மற்றும் அமைதி நிறுவனம், வெளியிட்டுள்ள உலகளாவிய அமைதிக் குறியீட்டுப் பட்டியலில், எக்காலத்திலும் இருந்ததைவிட கடந்த பத்து ஆண்டுகளில் உலகில் அமைதி மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது என்றும், இந்நிலை உலகளாவிய அமைதி சமத்துவமின்மை இடைவெளியை உருவாக்குகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

போஸ்ட்வானா, சிலே, கோஸ்டா ரிக்கா, ஜப்பான், மொரிஷீயஸ், பனாமா, கத்தார், சுவிட்சர்லாந்து, உருகுவாய், வியட்நாம் ஆகிய பத்து நாடுகளில் மட்டுமே சண்டை இடம்பெறவில்லை என்றும் அந்த ஆய்வு கூறுகிறது.

உலகில், 2015ம் ஆண்டுக்கான அமைதியான நாடுகள் பட்டியலில், ஐஸ்லாந்து மீண்டும் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து, டென்மார்க், ஆஸ்ட்ரியா, நியூசிலாந்து, போர்த்துக்கல் என, நாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இப்பட்டியலில் இந்தியாவுக்கு 141வது இடமே கிடைத்துள்ளது. 2014ம் ஆண்டில் இந்தியா 143வது இடத்தில் இருந்தது. இப்பட்டியலில் பாகிஸ்தான் 153வது இடமும், ஆப்கானிஸ்தான் 160வது இடமும், கடைசி இடமான 163வது இடத்தை சிரியாவும் பெற்றுள்ளன. தெற்காசியாவில் சிறந்த இடத்தை பிடித்துள்ள பூட்டான், இப்பட்டி லில் 13வது இடத்தில் உள்ளது.

இலங்கை 114ம் இடத்திலுள்ளது குறிப்பிடத்தக்கது.



# ஜூன் மாதம் திரு இருதய ஆண்டவர் திருவிழா நமக்கெல்லாம் பெருவிழா

**திருத்தூதர் புனித பவுல் கூறுவதாவது**

**“கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மை பிரிக்கமுடியும். இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கமுடியாது” என்பது உறுதியான நம்பிக்கை (உரோ 835-37)**

ஜூன் மாதம் திரு இருதய ஆண்டவரின் பெருவிழாவினைக் கொண்டாடி அவரது அன்பிலே மகிழ்வடைகின்றோம்.

இதயம் என்பது அன்பின் இருப்பிடம் அல்லது அன்பின் பிறப்பிடம் எனச் சொல்கிறோம். இயேசுவின் இதயத்திலிருந்து அன்பு என்கின்ற தீ எப்பொழுதும் சுடர்விட்டு எரிந்துகொண்டிருக்கின்றது. இதே அன்புத் தீ நம்மையும் பற்றிக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் திரு இருதய ஆண்டவரின் அன்பால் ஆட்கொள்ளப்பட்டு, பிறர் அன்புப் பணியில் முழுமை யாக ஈடுபட வேண்டும். நம்மிடம் உள்ளதை பிறரோடு பகிர்ந்து வாழும் தாராள உள்ளம் கொண்டவர்களாய் வாழ வேண்டும்.

இயேசுவின் திரு இருதயம் இறைமகனாகிய கிறிஸ்து நம்மீது பொழிகின்ற அன்பிற்கும், அருளிற்கும் நீதிக்கும் ,இரக்கத்திற்கும் அடையாளமாய் அமைகின்றது. 'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள் (மத் 11:28-29) எனும் இறைவார்த்தைக்கேற்ப இயேசுவின் வாழ்விலிருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு.

ஆயன் இல்லா ஆடுகளாய் இருந்த மக்கள் மீது பரிவு கொண்டவர் இயேசு. கருணையும், கரிசணையும் கண்களில் இருந்து அல்ல. அது இதயத்திலிருந்து கசிய வேண்டும். எவனொருவன் அடுத்தவருடைய வேதனையை வலியை தனதாகக் கொண்டு துடிக்கிறானோ அவனால் மட்டுமே அடுத்தவருக்கு உதவிட முடியும். திருத்தூதர் புனித பவுல் கூறுவது போல, “நாம் நல்லவர்கள் என்பதற்காக இயேசு உயிரைக் கொடுக்கவில்லை. மாறாக நாம் கெட்டவர்கள் ஆனாலும் கூட நம்மீது கொண்ட அன்பிற்காகவே உயிரைக் கொடுத்தார். நாம் அடுத்தவர்கள் காயப்படும் போது இரத்தம் சிந்தவில்லை என்றாலும், கண்ணீரையாவது சிந்துகின்றோமா? அடுத்தவர்கள் துன்பப்படும் போது பரிவுகொண்டவர்களாய் வாழ்கின்றோமா? இறைமகன் இயேசு தனது சீடர்களுக்கு வழங்கிய பணியைத் தொடர்ந்து செய்வது நம்முடைய கடமை என்பதை உணர்ந்திருக்கின்றோமா?

நம் வாழ்வில் நெருக்கடிகள், வாழவே முடியாது என்று நினைக்கக் கூடிய சூழ்நிலைகள், ஏமாற்றங்கள், தொடர்தோல்விகள் சுமக்கமுடியாத கடன் தொல்லைகள், வைத்தியர்கள் முடியாது என்று கைவிட்ட நோய்கள் என நம் விசுவாசத் தைக் குறைக்கக் கூடிய பல பிரச்சினைகள் மத்தியில் திரு இருதய ஆண்டவர் நமக்கு தரும் செய்தி என்ன வென்றால்

“அஞ்சாதே ! அஞ்சாதே !

கலங்காதே நான் உன்னோடு இருக்கின்றேன்” என்பதாகும்.

இறைவனுடைய வாக்குகளை முனைப்போடும் உறுதியோடும் போதித்த ஏரேமியாசை பழிவாங்க போலி இறைவாக்கினர்கள் முயற்சி எடுத்தாலும் ஏரேமியாசின் ஆழமான நம்பிக்கை இறைவன் என்னைப் பாதுகாப்பார் என்பதே ஆகும்.

நம்முடைய கவலைகள், வேதனைகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இந்த உலகத்தினுடைய தேவைகளினாலும், நமது அளவுக்கு அதிகமான ஆசைகளினாலும் ஏற்படுகின்றன என்பதை நாம் உணராமல் இருக்கின்றோம்.

திருத்தூதர் புனித பவுல் கூறுவதாவது ;

“கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மை பிரிக்கமுடியும். இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கமுடியாது என்பது உறுதியான நம்பிக்கை (உரோ 835-37)

இயேசுவே உலகின் அரசர். அவரது அரசு கண்ணுக்குப் புலப்படாத தம்மை, அன்பு செய்யவும் நம் உடல், உள்ளம், ஆன்மா, இதயம் உயிரனைத்தையும் தம் திரு இதயத்திற்கு ஒப்புக்கொடுக்கவும் வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். இவ்வாறு ஒப்புக்கொடுப்பதால் இயேசு மிகுந்த ஆறுதல் அடைகிறார். ஆன்மீகத்தில் நிறைவுபெற இது எளிய வழி என “மார்க்கரித்” எழுதிவைத்துள்ளார்.

குடும்பங்களும், நாடுகளும் இயேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுப்பட வேண்டும் இது இயேசுவின் விருப்பம்.

இயேசுவே ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலைவர். இயேசுவின் திருஇருதயப் படம் ஸ்தாபகம் செய்துவைக்கப்பட்டுள்ள குடும்பத்தில் தம் அன்பும், ஆசீரும் நிறைந்து விளங்கும் எனஇயேசு வாக்களித்திருக்கிறார்.

திரு இருதய இயேசுவிற்கு ஊழியம் செய்யும் விசுவாசிகளின் பெயர்களைத் தம் திரு இருதயத்தில் பதிந்து வைத்திருப்பதாகக் கூறுகிறார். எவ்வாறு நம் பாவங்கள் இயேசுவின் திருஇருதயத்தை நோகச் செய்கின்றன என்றும், எவ்வாறு நம் ஒறுத்தல்கள், நோன்பு, செபம், நற்கிரிகைகள், ஊழியங்கள் இயேவின் திருஇருதயத்திற்கு ஆறுதல் அளிக்கும் என்றும் மார்கரீத்து மரியம்மாளுக்கு இயேசு விளக்கிக் காட்டினார். இயேசு தம் அன்பின் உயிருள்ள அடையாளமாக தம் இருதயத்தைக் காட்டி நாமும் பதிலுக்கு அவரை அன்பு செய்ய அழைக்கிறார். திரு இருதய பக்தியில் நாம் அதிகம் ஈடுபட வேண்டும் என விரும்பும் இயேசு பாவிகளுக்கு என் இதயம் இரக்கத்தின் கடலாக இருக்கும். குறைவான பக்தியுள்ளவர்கள் ஆழ்ந்த பக்தி உடையவராவர். உருக்கமான பக்தி உள்ளவர் உத்தம தானத்தை அடைவர் என வாக்களித்துள்ளார்.

புனித பவுஸ்டீனாவுக்கு 1930 இலிருந்து பலமுறை இயேசு காட்சியளித்தார். “என் இதயம் இரக்க மயமானது இந்த இரக்கக் கடலிலிருந்து அருள் வெள்ளம் உலகம் முழுவதும் பாய்கிறது. என்னிடம் எந்த ஆன் மாவும் ஆறுதல் அடையாமல் போனதில்லை. என் இரக்கத்தில் எல்லாத் துன்பங்களும் மறைந்து விடுகின்றன. மீட்பும அருளும் புனிதப்படுத்தும் அருளும் இந்த ஊற்றிலிருந்து துளிர்கின்றன. நலம் கெட்ட சமுதாயத்தை என் இதயத்திற்கே வரும்படி சொல்.நான் அமைதியால் நிரப்புவேன். நம்பிக்கையோடு என் இரக்கம் நாடி என்னிடம் திரும்பும்வரை மனித சமுதாயம் அமைதியைக் காணவே முடியாது. நான் நீதிபதியாக வரும்முன் என் இரக்கத்தின் கதவுகளை விரியத் திறக்கிறேன். என் இரக்கத்தின் வாயில் வழியாக செல்ல விரும்பாதவர் என் நீதியின் வாயில் வழி சென்றுதான் ஆக வேண்டும்” என இயேசு அழைப்பு விடுகின்றார்.

இயேசுவின் திரு இருதயமே நாங்கள் செய்யும் துரோகங்களுக்காக..... என்ற செபத்தை காலையிலும், மாலையிலும் இயேசுவின் திரு இருதயத்திற்கு குடும்பங்களை ஒப்புக் கொடுக்கும் செபத்தை மன்றாடவும் திருச்சபை அழைக்கிறது.

“எங்கள் மீது உள்ள அன்பினால் பற்றி எரியும் இயேசுவின் திரு இருதயமே எங்கள் இதயங்களை உம்மேல் உள்ள அன்பினால் பற்றி எரியச் செய்தருளும்”. என்றும், இதயத்தில் தாழ்ச்சியும் அமைதியும் உள்ள இயேசுவே எங்கள் இருதயங்களை உம் திரு இருதயத்தை முன்மாதிரியாக பின்பற்ற மாற்றியருளும் என்றும், இயேசுவின் திரு இருதயமே உமது அரசு வருக என்றும் செபிப்போம்! இயேசுவின் குத்திக் திறக்கப்பட்ட திருஇருதயமே நம் புகழிடம். இயேசுவின் மார்பில் சாய்ந்து மகிழ்ந்திருப்போர் பேறுபெற்றோர்.

**— கலாபூஷணம். புலவர் அரியநாயகம்.**
செய்குழு உருப்பினர். திருஇருதய பக்திச் சபை
புனித அடைக்கல அன்னை ஆலயம் யாழ்ப்பாணம்.

## யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு - 2016

### - சிறப்புக் கட்டுரை -

பகுதி - II
பாகம் 07

# புதுப்பித்தலுக்கு ஓர் அழைப்பு

## "புதிதாய் வாழ்வோம்"

### ஓர் உளவள ஆன்மீகப்பார்வை முன்னுரை

கரவையூர்ச் செல்வம்

"புதிதாய் வாழ்வோம்" என்ற தலைப்பு யாழ் மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாட்டின் தலைப்பு. இந்த மாநாட்டின் கருப்பொருள்: "செயல்களோடு கூடிய விசுவாசம்". தலைப்பும் கருப்பொருளும் நான் பெற்றுக் கொண்டவை. இரண்டிலும் எனக்கொரு பிடிப்புண்டு. அதனால், இவற்றையிட்டு சிறிது ஆழமாகப் பார்க்க விரும்புகின்றேன். அந்தப் பார்வையில் தோன்றிய எனது கருத்துகளை, எனது சிந்தனையை காவலன் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

**எனது பகிர்வு**

யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு என்று கேள்வியுற்றதன் விளைவாக எழுந்த சிந்தனைகள் அல்ல இவை. அன்றேல், இரவோடிரவாக தோன்றிய சிந்தனைகளும் அல்ல இவை. முரணாக, ஒரு நீண்ட காலத் தேடலில் கண்டவை, பல தவறுகளில் இருந்து நான் கற்றுக்கொண்டவை, ஆழ்ந்த மௌனத்தில் அமிழ்ந்த பொழுது அகத்தே மலர்ந்த நுண்ணறிவுகள், பரவலாகப்படித்த நூல்களில் பெற்றுக் கொண்ட கருத்துகளால் எதிர்முகப்படுத்தப்பட்டு அதன் விளைவாக எனதாக்கிய நம்பிக்கைகள், பல்வேறு பட்ட சூழல்களிலும் பண்முகக் கலாசாரங்களிலும் நடைபெற்ற கருத்தரங்குகள், தியானங்களில் பங்கு கொண்ட பெரியோர், சிறியோர், இடைப்பட்டோரின் வினாக்களாலும் அவர்கள் பகிர்ந்து கொண்ட கருத்துகளாலும் பெற்ற வளர்ச்சியும் ஒருங்கிணைந்து வர எனது வாழ்க்கைப் பயணத்தில் நான் பெற்ற உறுதியில் உதிர்ந்த கருத்துகள், இவை. இவற்றில் எனது வாழ்க்கை உண்டு. எனது எழுத்தைப் புரிந்து கொள்ள இந்தப் பின்னணி உதவும். **"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"** என்ற தமிழர் பண்பாட்டில் ஊறிய நான், நான் பெற்ற அனுபவங்களை அவற்றின் ஊடாக நான் பெற்ற தெளிவை யாழ் மறைமாவட்ட மக்களுடன் பகிர்ந்துகொள்ள முனைகின்றேன். இதில் ஒரு நிறைவு.

**ஒரு முழுமையான பார்வை**

றக்குவானைக்கும் தெல்தேனியாவுக்கும் உள்ள A-17 வீதியில் கடமுதுண என்ற ஒரு சிறு கிராமம். இந்தக் கிராமத்தில் உள்ள ஒரு சிறு குன்றில் A-17 வீதியின் ஒரு பக்கமாக இரத்தினபுரி மறைமாவட்டத்திற்குச் சொந்தமான ஓர் அழகிய தியான இல்லம் உண்டு. சுற்றிவர பசுமையாகத் தோன்றும் தேயிலைத் தோட்டங்களின் மத்தியில் 'நான்வேறுபட்டவன்' என்று கூறுவது போல நீல வண்ணக் கூரை கொண்ட இந்தத் தியான இல்லம் அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒரு வித்தியாசமான கட்டிடம். இங்கிருந்து கொண்டுதான் யாழ் மறைமாவட்ட மக்களின் நினைவிலும். காவலன் வாசகர்களுடைய சிந்தனையிலும் என்னை இருத்தி, வேறோர் முக்கிய பணியில் ஈடுபட்டிருக்கும் அதே வேளை, சில நேரங்களைக் 'கள' வெடுத்து இக்கட்டுரைத் தொடரை எழுதுகின்றேன்.

**மரமல்ல, காடு!**

இந்தத் தியான இல்லத்தில் நின்று கொண்டு இடது பக்கமாகப் பார்த்தால் ஒரு பெரிய பள்ளத்தாக்கு. பள்ளத்தாக்கின் மறுமுனையில் தொடர் மலைச் சாரல். பள்ளத்தாக்கைப் பார்க்கும் பொழுது தனி மரங்கள் தெரிவதில்லை; தனிச் செடிகள் தெரிவதில்லை. காடுதான் (Forest) தெரியும். அதே போன்று, வலப்பக்கம் பார்க்கும்பொழுது நான் நிற்கும் குன்றிலிருந்து மிக உயர்ந்த மலைச் சாரல்கள் தெரியும். இங்கும், தனி மரங்கள் தெரிவதில்லை: தனிச் செடிகள் தெரிவதில்லை. காடுதான் தெரியும். ஒரு பச்சை விரிப்பை விரித்துவிட்டால் போன்று ஒரு பசுமையான காட்சி. ஓர் ஒட்டு மொத்தமான பார்வையில் ஒரு முழுமை: அதில் ஒரு தனி அழகு, ஒரு முழு அழகு. தனிமரமும், தனிச்செடியும் தன்னிலே ஓர் அழகைக் கொண்டிருப்பினும், மொத்தமான பார்வையில் தோன்றும் முழுமை அழகு வேறுபட்டது. "Do not see the trees but see the forest" என்று என்றோ படித்த ஒரு கவிதை அடி ஞாபகம் வந்தது. அந்தக் கவிதை அடியின் அர்த்தம் இன்று எனது அனுபவமானது. அதில் ஓர் அர்த்தம் காணும் பொழுது, அது இனிமையானது.

**ஒரு முழுமையான பார்வை அவசியம்**

புதிதாய் வாழ்வதற்கு முழுமையைப் பார்ப்பது அவசியம். பொதுமக்கள், துறவிகள், குருக்கள் என்று தனித்தனியாகப் பார்த்தாலும், ஒவ்வொன்றினதும் களநிலை வேறுபட்டிருப்பினும், அவற்றையெல்லாம் ஒன்றுகூட்டி முழுமையாகப் பார்ப்பது புதிதாய் வாழ்வதற்கு அவசியம்.

இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின்னர் "இறைமக்கள்" என்ற சொற்றொடர் பழக்கத்திலும் வழக்கத்திலும் வந்துவிட்டது. ஆனால், அச்சொற்றொடர் பொதுமக்களை மட்டுமே அடையாளங் காட்டுவதாக அர்த்தங் கொள்ளப்பட்டது. அவ்வாறெனில், குருக்கள், துறவிகள், ஆயர்கள், கருதினார்கள் யார் மக்கள்? அனைவரையும் உள்வாங்கும் ஒரு சொற்றொடராகவே நான் "இறைமக்கள்" என்ற சொற்றொடரை அர்த்தங் கொள்ளுகின்றேன். இதில், ஒரு முழுமையான பார்வை உண்டு. இந்தப் பார்வை புதிதாய் வாழ்வதற்கு அவசியம். நாமெல்லோரும் புதிதாய் வாழ அழைக்கப்படுகின்றோம். இது, யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் அழைப்பு மட்டுமல்ல, இது ஓர் இறை அழைப்பு, அதை மறந்து விடக்கூடாது. ஆகவே, **'நாங்கள்'** + **'அவர்கள்'** இணைந்து = **"நாம்"** என மாறுவது அவசியம். அப்பொழுதுதான் "ஊர்கூட்டித் தேரிழுக்கலாம்". ஊரில் உள்ள யாவரையும் உள்வாங்க வேண்டும். அல்லது ஒரு சிலர் தேரிழுக்க, வேறு சிலர் தள்ளி நின்று வேடிக்கை பார்க்க, இன்னும் சிலர் தம்மை புறம்பாக்கி ஆவலாதி அவதூறு பேச, வேறு சிலர் எட்ட நின்று கட்டளைகள் பிறப்பிப்பார்களானால், அங்கு ஒரு முழுமை தோன்றாது. ஒரு வேளை தேர் இழுபடலாம்: ஆனால், எங்கு நோக்கி இழுபடுகின்றது என்பது கேள்விக்குறியாக மாறும். தனிமரங்கள் தெரியும், முழுமை தெரியாது.

ஒரு தனிமனித வாழ்விலும், ஒருவரது வாழ்வை பாகுபடுத்தியோ அன்றேல் பிளவு படுத்தியோ பார்ப்பது ஆரோக்கியமற்றது. முழுமையை நோக்கி வாழவேண்டும். இதைப் பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

**"பழையன கழிதல்"**

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" புதிதாய் வாழ்வதற்கு இன்றியமையாதது. இவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல: ஒன்றில் இருந்து ஒன்று மலர்வது. இதை இயேசு வேறு வகையில் வர்ணித்தார்: "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிடில் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (அரு. 12:24). இங்கு "கழிதலும், மடிதலும்" ஒன்றையே சுட்டிக்காட்டுகின்றன. எது அல்லது எவை கழியவேண்டும், எவை மடிய வேண்டும் என்று அடையாளங் காண வேண்டும்.

**'கழி'யப்பட வேண்டியவை**

ஒரு தனி மனித வாழ்வை எடுத்துக் கொண்டால் குழந்தைப் பராயம் தொட்டு ஓர் உளவள சமூகத்தில் வளரும் பொழுது அந்தக் குழந்தை / அந்தத் தனிநபர் பல சிந்தனைகளை, கலாசாரப் பழக்க வழக்கங்களை, பல நடத்தைகளை உள்வாங்கியே வளரும் / வளர்வார். பெற்றோரின் பங்களிப்பு, குடும்பத்தின் பங்களிப்பு, சமூகத்தின் பங்களிப்பு, கல்வியின் பங்களிப்பு, மதத்தின் பங்களிப்பு என்று உளவள சமூகம் விரிகின்றது. அந்தத் தனி நபர் உள்வாங்கும், அன்றேல் தன்னுடைய வாழ்வுடன் இணைத்துக் கொள்ளும் பங்களிப்புகள் அனைத்தும் அவருடைய நல்வளர்ச்சிக்கு உதவுமென்றில்லை. உதவாத அனைத்தும், ஆரோக்கியமற்ற அனைத்தும் கழியப்படவேண்டும். அவற்றிற்கு ஒருவர் மடியவேண்டும்.

அதுமட்டுமல்ல, ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பாதிப்புகள், நோவுகள், உடைபட்டமை, முறிபட்டமை, இழப்புகள், குற்ற உணர்வுகள், அதிர்ச்சியினால் ஏற்பட்ட உளநெருக்கீடுகள் போன்றவையும் கழியப்பட வேண்டும்; அவற்றிற்கு ஒருவர் மடிய வேண்டும்.

பொறாமை, ஆணவம், 'நான்' என்ற மமதை (Egoism), பற்றுக்கள், பேராசைகள், மன்னிக்காமை, வெறிகள் (சாதி,மத, இன போன்றவை) போன்றவற்றில் இருந்து குணமடைதல் வேண்டும்.

நோயும் ஆரோக்கியமும் ஒரே நேரத்தில் ஒருவரில் இருக்க முடியாது.


அங்ஙனம் வலுக்கட்டாயமாக இருத்த முனையும் பொழுது அது இரட்டை வாழ்வாக மாறும். அகத்தே ஒரு பிளவுபட்ட, உடைபட்ட நிலையை உருவாக்கும். இந்நிலையில் புதிதாய் வாழமுடியாது.

**(வளரும்)**

# கியூடெக் - கரித்தாஸ் வாழ்வாதார உதவிப்பிரிவு


## ஆடு வளர்ப்பு - 08, கோழிவளர்ப்பு -02, சிற்றுண்டி தயாரிப்பு -06, தையல் வேலை -04, சிறுகடைவியாபாரம் -05, கருவாட்டு வியாபாரம் -02, மேசன் தொழில் உபகரணம் -01









யாழ்ப்பாணம் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினூடாக கரித்தாஸ் அவுஸ்ரேலியாவின் நிதியுதவியுடன் இவ்வருடம் பங்குனி, சித்திரை மாதங்களில் சுன்னாகம், மல்லாகம் ஆகிய கிராமங்களின் கண்ணகி, சபாபதிப்பிள்ளை, பிள்ளையார், கோணல்புலம் போன்ற முகாம்களில் வாழும் மக்களுள் 26 பேருக்கும் மற்றும் சுன்னாகம் நீதிமன்ற முகாம், புத்தூர், அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஆகிய கிராமங்களிலுள்ள முகாம்களில் வாழும் மக்கள் 26 பேருக்கும் சிறுதொழில் முயற்சியாக மேலேகாட்டப்பட்டுள்ள விபரங்களினின்படி வாழ்வாதார உதவிகள் இயக்குனரால் வழங்கப்பட்டுள்ளன.

# மகிழ்ச்சிகர கற்றலுக்கான செயற்திட்டம்










கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குனர் இயுயின் தலைமையில் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தல் தொடர்பான செயற்திட்டத்தினைக் கருத்திற் கொண்டு மாலைநேர மகிழ்ச்சிகர கற்பித்தல் நிகழ்சித்திட்டம் சித்திரை 2016 முதல் ஆரம்பித்து நடாத்தப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் சங்கானை கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அராலி வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை, துணவி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, வட்டு மேற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை போன்ற பாடசாலைகளிலிருந்து 143 மாணவர்களைத் தெரிவு செய்து அம் மாணவர்களுக்கான தகைமையுடைய 8 ஆசிரியர்களைத் தேர்ந்து இக்கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எமது நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் இவ்வாசிரியர்களுக்கான கொடுப்பனவும் வழங்கி, பெற்றோருக்கான வழிகாட்டல் கருத்தமர்வுகளும் நடாத்தப்பட்டுவருகின்றன. அத்துடன் அம்மாணவர்களுக்கான மாதாந்த சத்துணவும், கற்றல் உபகரணங்களும் 11.05.2016 அன்று இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தெரிவு செய்யப்பட்ட இம்மாணவர்களின் குடும்பங்களுக்கு மீளளிப்புக் கடன் வசதிகளும் இப் பாடசாலைகளின் நூலகங்களுக்கான நூல்களும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாவும் எதிர்காலத்தில் நடைபெறவுள்ளது.

# சிறுவர் கல்வித்திட்டம்





கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் கரித்தாஸ் கொரியாவின் நிதியுதவியுடன் கடந்த 2014ம் ஆண்டு தொடக்கம் கரையோர வறிய பாடசாலைகளாகிய கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், புனித றோக்ஸ் வித்தியாலயம், புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயம் (ஆண்கள் பாடசாலை), கொட்டடி நமச்சிவாய வித்தியாலயம், ஒஸ்மானியா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைச் சித்தியடைய வைக்கும் நோக்கில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், சத்துணவுகள், சுகாதாரப் பொருட்களான (Tooth Paste, Brush, Soap) மாணவர்கள் தமது இல்லங்களிலிருந்து கல்விகற்பதற்கான மேசை, கதிரைகளும், மின்சார வசதிகளற்ற மாணவர்களுக்கு மின் விளக்குகளும் (Charger Light) வழங்கப்பட்டதோடு மாணவர்களின் பெற்றோருக்கு மாணவர்களின் கற்றலுக்கான வீட்டுச் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. அத்தோடு ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக பரீட்சை வினாத்தாள்களும், பயிற்சிப் புத்தகங்களும், கடந்த கால வினா விடைப்புத்தகங்களும் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி. ச. இயூயின் பிரான்சிஸ் அடிகளாரினால் சென்றவாரம் வழங்கப்பட்டது.

## உடையார் கட்டு

## கிறிஸ்து அரசர் ஆலய பெருவிழா

மேற்படி பெருவிழா 01.06.2016 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மூன்று நாட்கள் திரிதின ஆராதனையும் 05.06.2016 திருநாட் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டன. திருநாட் திருப்பலியை அருட்தந்தை கொன்பியூசியஸ் அடிகளார் தலைமைதாங்கி நிறைவேற்றினார். அவர் தமது மறையுரையில் "கிறிஸ்துவின் அரசு ஆணவம் கொண்ட அரசு அல்ல, அன்பின் அரசு, தண்டனையை அல்ல இரக்கத்தை வழங்கும் அரசு, ஏனையோருக்காகத் தன்னைத் தியாகம் செய்த அரசு. ஆகவே அந்த அரசுக்காய் உழைப்போம்" என்ற அவரது மறையுரை எம்மை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டியது. தொடர்ந்து கிறிஸ்து அரசரின் திருச்சொரூபப் பவனி, பங்குத் தந்தை அருட்திரு. ஜஸ்ரின் அடிகளாரின் பிரியாவிடைச் செபம், திருச்சொரூப ஆசீர் ஆகியவற்றுடன் திருவிழாத் திருப்பலி இனிதே நிறைவுபெற்றது. அயற்பங்குகளான சுதந்திரபுரம், தேராவில், வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு போன்ற பங்குகளில் இருந்து ஏராளமான மக்களும், அருட்சகோதரிகளும் வருகை தந்திருந்தனர். வழிபாடுகளை நெறிப்படுத்திய அருட்சகோதரிகளின் பங்களிப்பு பாராட்டத்தக்கது.

தொடர்ந்து வழங்கப்பட்ட விருந்தில் அனைத்து மக்களும் ஒற்றுமையோடும், அன்போடும் பகிர்ந்துண்டது மனமகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருந்தது.

**பங்குத்தந்தை.**

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
# பின்னணி, தோற்றம், வளர்ச்சி

முன்னைய தொடர்ச்சி...

அருட்பணி
S.V.B.மங்களராஜா

## இலங்கையின் இரண்டாவது அப்போஸ்தலிக்க முதல்வர் (Vicar Apostolic) - ஆயர் கேய்தானோ அந்தோனியோ (Bishop Gaetano Antonio) 1843-1857

துவக்கத்தில் விசுவாசப் பரப்புதல் சபை கேய்தானோ அந்தோனியோ அடிகளைத் துணை ஆயர் பதவிக்குப் பரிசீலிப்பதில் தயக்கம் காட்டியது. முன்னதாக விசெந்தே டோ றொசாய்ரோ அடிகள் அப்போஸ்தலிக்க முதல்வராகத் தெரியப்பட்டதற்கு, கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார். அத்துடன் தன்னை கோவா பேராயரின் குரு முதல்வர் என்று கருதி வந்தார். 1838ம் ஆண்டு உரோமைத் தலைமைப்பீடம் வெளியிட்ட 'முல்தா பிறெக்கிளாறே' (Multa Praclar) என்ற மடல் கொச்சின் ஆயரின் அதிகாரங்களை மட்டுப்படுத்தியது. இதுவரை இலங்கை, கிராங்கனூர், மயிலாப்பூர் ஆகிய இடங்கள் மீது கொச்சின் ஆயர் கொண்டிருந்த ஆட்சியதிகாரம் நீக்கப்பட்டது. இதன் பின்னர்தான் கேய்தானோ அந்தோனியோ தாழ்ச்சியுடன் இலங்கையின் அப்போஸ்தலிக்க முதல்வர் விசெந்தே டோ றொசாய்ரோவின் அதிகாரத்திற்கு பணிந்தார்.

ஆயர் விசெந்தே டோ றொசாய்ரோவின் குறுகிய பதவிக்காலம் ஒரட்டோரியன் சபையினரிடமிருந்து ஐரோப்பிய மறைப் பணியாளரின் கைக்கு மாறும் காலமாகவே பார்க்கப்பட வேண்டியிருந்தது. கோவாவிலிருந்து ஒரட்டோரியன் சபைக்குருக்களை இனிப்பெரிதாக எதிர்பார்க்க முடியாது என்ற நிலையை உரோமை விசுவாசப்பரப்புதல் சபை உணர்ந்தது. முன்னதாக 1832ம் ஆண்டு போத்துக்கல்லில் அரசியல் களநிலவரம் தலைகீழாக மாறியது. அங்கு அவ்வருடம் கத்தோலிக்க சமயத்தின் மீது விரோதப்போக்கைக் கடைப்பிடித்து வந்த லிபரல் கட்சி பதவிக்கு வந்தது. கத்தோலிக்க சமயத்திற்கு எதிரான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. துறவற சபைகள் தடைசெய்யப்பட்டன. இதனால் இலங்கைக்குக் குருக்களை அனுப்பிவந்த கோவா ஒரட்டோரியன் சபையும் கலைக்கப்பட்டது அல்லது அதற்குரிய அனுமதி மறுக்கப்பட்டது எனலாம். உரோமைத்திருப்பீடத்திற்கும் போர்த்துக்கல் அரசிற்கும் இடையில் இருந்த இராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டன. லிஸ்பனில் பாப்பரசரின் வதிவிடப் பிரதிநிதியாக இருந்த பாப்பரசரின் தூதுவர் வெளியேற வேண்டியேற்பட்டது.

இந்தப் பின்னணியில் போர்த்துக்கல்லின் கட்டுப்பாட்டில் இருந்த கோவாவிலிருந்து குருக்களை இனியும் எதிர்பார்ப்பது முடியாத விடயமாயிற்று. இலங்கையில் அதுவரை பணியாற்றிய ஒரட்டோரியன் சபைக்குருக்களும் சுதேச குருக்களை உருவாக்குவதில் எதுவித முனைப்பும் காட்டியிருக்கவில்லை. எனவே ஐரோப்பாவிலிருந்து குருக்களை கொண்டுவரவும் படிப்படியாகச் சுதேச குருக்களை உருவாக்கவும் விசுவாசப் பரப்புதல் சபை முனைப்புக்காட்டியது.

முதலாவதாக ஒரு ஐரோப்பிய குரு 1842 இல் இலங்கை வந்தார். ஆயினும் இவர் விசுவாசப்பரப்பதல் சபையினால் அனுப்பப்படவில்லை. இவர் பிரான்சுவா டூமாஸ் (Francois Dumas) எனும் லாசறிஸ்ட் (Lazarist) சபைக்குரு ஆவார். இவர் பல வருடங்கள் சீனாவில் மறைப்பணியாற்றிய பின்னர் தமது துறவற சபையை விட்டு விலகி ஐரோப்பா செல்லும் வழியில் இலங்கையில் தரிக்க வேண்டியேற்பட்டது. இவருக்கு இலங்கை மிகவும் பிடித்துப் போனதால் இங்கேயே நிலை கொண்டு பணியாற்றத் துவங்கினார். இவரை ஒரட்டோரியன் சபைக்குருக்களின் மறைப்பணியில் திருப்தியடையாதோர் ஆதரித்து அனுசரனை வழங்கியதால் அப்போஸ்தலிக்க முதல்வர் விசெந்தே டோ றொசாய்ரோ அடிகளாருக்கு அவரைப் பிடிக்கவில்லை அத்துடன் சரியான புரிந்துணர்வின்மையால் விசுவாசப்பரப்புதல் சபையும் டூமாஸ் அடிகளாரை அவ்வளவு நம்பவில்லை. விசுவாசப்பரப்புதல் சபை டூமாஸ் அடிகள் லாசறிஸ்ட் சபையினர் என்பதை அறியாமல் அவர் பிரான்ஸ் வெளிநாட்டு மறைப்பணியாளர் (Paris Foreign Missions Society) சபையைச் சேர்ந்தவர் என்று எண்ணியது. ஆனால் இச்சபையினர் இவர் தனது சபையில் ஒருபோதும் இருந்ததில்லை என்று கூறிவிட்டனர். இவர் 1842 இலேயே இலங்கையை விட்டுச்சென்றாலும் இவரது குறுகிய கால இலங்கைப்பணி பின்னர் ஐரோப்பிய மறைப்பணியாளரது வருகைக்கு ஒருவிதத்தில் முன்னோட்டமாக இருந்தது எனலாம். அப்போஸ்தலிக்க முதல்வர் ஆயர் விசெந்தே டோ றொசாய்ரோ தாம் இறப்பதற்கு 2 மாதங்களுக்குமுன் அதாவது 21ம் திகதி பெப்ரவரி மாதம் 1842க்கு முன்னரே கேய்தானோ அந்தோனியோ அடிகளாரை தமது பதில் முதல்வராக (Pro Vicar) வைத்திருந்தார். ஆனால் ஆயர் விசெந்தே டோ றொசாய்ரோவின் இறப்பிற்குப்பின் கேய்தானோ அந்தோனியோ அடிகளை அடுத்த அப்போஸ்தலிக்க முதல்வராக்க விசுவாசப்பரப்புதல் சபை நாட்டம் காட்டவில்லை. முன்னதாக இவர் உரோமை விசுவாசப்பரப்புதல் சபைக்கெதிராக எடுத்த நிலைப்பாடுகள் இதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கலாம். ஒரு புறத்தில் இலங்கையில் பணியாற்றிக்கொண்டிருந்த ஒரட்டோரியன் சபைக்குருக்கள் தம்மில் ஒருவர் தான் அப்போஸ்தலிக்க முதல்வராக நியமிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். அதற்கு அவர்கள் முன்வைத்த காரணம் முன்னதாக கோவா ஆளுநர் தம்மை கோவா திரும்பும்படி விடுத்த ஆணையின்படி, தாம் கோவா திரும்பாது இலங்கையிலேயே தொடர்ந்து நிலை கொண்டிருந்தமையும் இப்போது தம்மை விட வேறொருவர் இலங்கை அப்போஸ்தலிக்க முதல்வராக நியமிக்கப்பட்டால், தமதுநிலை மற்றவர்களின் ஏளனத்திற்கும், பரிகசிப்புக்கும் உள்ளாகி விடுமென்றும், தம்மால் அதனால் எதுவித மறைப்பணியும் செய்ய முடியாது போய்விடலாம் என்றும் கருதியமையாகும். 'உரோமை விசுவாசப் பரப்புதல் சபை'யோ தகுதியான ஐரோப்பிய குரு ஒருவரை அப்பதவிக்குத் தேடிக் கொண்டிருந்தது.

(தொடரும்...)

## மூத்த ஊடகவியலாளர் திரு. எஸ். யேசுதாசுக்கு விருதுகள் வழங்கி கௌரவிப்பு





பாதுகாவலன் பத்திரிகையின் மூத்த செய்தியாளரும் பல்துறைசார் எழுத்தாளருமான கொழும்புத்துறையைச் சேர்ந்த எஸ். யேசுதாஸ் அண்மையில் பல விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். அவரது கலை எழுத்தாக்க, ஊடக, பொதுப்பணிகளைப் பாராட்டியே விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

கடந்த மாதம் இலங்கை சர்வோதய அமைப்பின் தேசிய தேசோதய சபை நடாத்திய கௌரவிப்பு நிகழ்வில் சர்வோதய தலைவர் ஏ.ரீ. ஆரியரத்னவினால் 'தேசோதய தீபம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இம்மாதம் 6ந்திகதி (06.04.2016) யாழ் கொட்டடி சனசமூகநிலையமும், கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்திய புத்தாண்டு விழா கௌரவிப்பு நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா. வேதநாதனினால் 'சமூக திலகம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை கடந்த வருட இறுதியில் விசப் சவுந்தரம் மீடியா சென்ரர் நிறுவுனர் அருள்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளின் நூல் வெளியீட்டு விழாவில் கத்தோலிக்க செய்தி அறிவிப்புப் பணிக்கு எஸ். யேசுதாஸ் ஆற்றிவரும் மகத்தான சேவையைப்பாராட்டி யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் பொன்னாடை போர்த்தி விருதுவழங்கி கௌரவிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

உதயன் பத்திரிகையின் செய்தியாளராகவும் யாழ் பல.நோ.கூ. சங்கப் பணியாளராகவும் யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக செயலாளராகவும் கடமையாற்றி வரும் இவர் பல தேசிய, மாகாண மட்ட எழுத்தாக்க, கலைப் போட்டிகளில் பங்குபற்றி விருதுகளையும். சான்றிதழ்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது இவரது சேவை மேலும் தொடர பாதுகாவலன் குடும்பமும் மனமார பாராட்டி வாழ்த்துகின்றது.

## நீங்காத நினைவுகளுடன்
## 10ம் ஆண்டு



அமரர்

**விக்டர் சுஜிந்தினி**

மலர்வு
03-03-1979

உதிர்வு
02-07-2006

"நீதியுள்ள ஆண்டவர் நேரிய செயல்களை விரும்புகின்றார் அவர்தம் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர்" (தி.பா 11:7)

"சாவினின்று என் உயிரை நீர் மீட்டருளினீர் வாழ்வோரின் ஒளியில் கடவுளின் முன்னிலையில் நான் நடக்கும் பொருட்டு என் அடிகள் சறுக்காதபடி காத்தீர் அன்றோ" (தி.பா 56-13)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்புடன் கேட்கிறோம்.

நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

Advt-63/16

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

---

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்த சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் நிலைத் திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னில் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

"பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி"
- ஆமென்.

Advt-62/16

உமது அடியாள்

---



**இறை இரக்க ஆண்டவரின் இரக்கத்தால் எனது மகனுக்கு நடந்த வாகன விபத்திலிருந்து உயிரைப் பாதுகாத்து தந்த இறை இரக்கத்தின் ஆண்டவருக்கு ஸ்துதி, புகழ் எல்லாம் உண்டாவதாக.**

Advt-61/16

இறை இரக்கத்தின்
அடியாள்.

---

## விண்ணக வாழ்வில்
### 46ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில
06 - 10 - 1962



விண்ணுலகில
26 - 06 - 1970

செல்வி
**மிரியம் ஷாமினி**

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்"
(உரோ 14:8)

உங்கள் ஆன்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்..

இவரின் பிராவால் துயருறும்
குடும்பத்தினர்.

சுருவில்.

Advt-60/16

---

**யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தினரால வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி**

யாழ் மறைமாவட்டத்தில் உள்ளடங்கும் ஐந்து மறைக்கோட்டங்களும் இணைந்து வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒவ்வொரு பங்குகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட பணமும், பொருட்களும் கரித்தாஸ் நிறுவனத்தினர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டது.

---


# அமதிபுரம் பங்கில் மரியன்னைப் பேரணி

அமதிபுரப் பங்கில் வணக்க மாதத்தை முன்னிட்டும், இறை இரக்கத்தின் தாயான அன்னை மரியாளின் பரிந்துரையை வேண்டியும், கடந்த 22.05.2016 ஞாயிறு மாலை 4 மணியளவில் எமது பங்குத்தந்தை அருட்பணி. யோண் பற்றிக் அ.ம.தி அவர்களின் தலைமையில் 'மரியன்னைப் பேரணி' இடம் பெற்றது. இப் பேரணியானது ஆனைவிழுந்தான் திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, வன்னேரிக் குளம் தூய காணிக்கை அன்னை ஆலயத்தில் நிறைவடைந்தது. மரியன்னையின் திருச்சுரூபம், அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து, அமதிபுர அன்னையின் பக்தர்களால் சூழப்பட்ட நிலையில், குருக்களும், துறவியர்களும் மிகச் சிறப்பான திருவுடைகளை அணிந்து, இப் பவனியில் பங்கெடுத்தார்கள். அன்னையின் திருச்சுரூபம் இதற்காக விசேடமாக அலங்கரிக்கப்பட்ட இடங்களில் நிறுத்தப்பட்டு அருட்தந்தையர்களின் மறையுரைகளும் இடம் பெற்றன. எமது பங்கின் ஏனைய ஆலயங்களில் இருந்தும் இறை பக்தர்கள் புடைசூழ, வெண்ணிற ஆடைகளுடன் வருகைதந்து, அன்னையின் பாதத்திலே ஒரே குடும்பமாக ஒன்றிணைந்து, இப்பேரணியில் ஆர்வத்தோடு கைகளைக் கூப்பி, அன்னையைப் போற்றிப் புகழ்ந்த நிகழ்வு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அன்றைய நாளில் அன்னையின் ஆசீர்வாதத்தால் நிரம்பிய இறைமக்கள், மரியன்னையின் பாடல்களாலும், அருட்தந்தையர்களின் மறையுரைகளாலும், இறையாசீரோடு சேர்ந்து ஆன்ம ஊக்கம் பெற்றனர். இறுதியாக அன்னையின் திருச்சுரூபம் வன்னேரிக் குளம் தூய காணிக்கை அன்னை ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு, அன்னையவள் தனது இறுதி ஆசீர்வாதத்தை வழங்கினாள். அன்னையின் பாதத்தை முத்தமிட்டு, ஆசீரையும், ஆதரவையும், பாதுகாப்பையும் வேண்டி நின்றார்கள். இப் பேரணியை எமக்காக ஒழுங்கு செய்து தந்த எம் பங்குத்தந்தை அருட்பணி. யோண் பற்றிக் அ.ம.தி. அவர்களுக்கும், இந்நிகழ்வை தமது மறையுரைகளால் சிறப்பித்த அருட்தந்தையர்களுக்கும் நன்றி கூறுவதோடு, இறையாசீரையும் வேண்டுகின்றோம். அன்னை ஆசீர்வாதம் என்றும் இருப்பதாக.

யோ. எழில்மேழி -
ஆனைவிழுந்தான்.

---

## 50ம் ஆண்டு நினைவஞ்சலி



**மேரி யோசப்பீன் மனுவல்பிள்ளை**

மலர்வு : 16-09-1888
உதிர்வு : 21-06-1966

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



**அடைக்கலநாயகி பூமணி லூயிஸ்**

மலர்வு : 08-09-1927
உதிர்வு : 29-07-2011

ஆண்டுகள் ஐம்பது சென்றாலும்
எமது அன்பு அம்மம்மாவையும்,
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
எமது பாசமுள்ள அம்மாவையும்
என்றும் மறவோம்.

793, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-65/16

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## நல்லவர்கள்...

தீய பழக்கங்களுக்கு அடிமைகளாகி, சமுதாய சீரழிவுகளுக்கு காரணமானவர்கள் ஆகிவிடுகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலையை இன்று அவதானிக்கமுடிவதாகவும் ஆயர் அவர்கள் கவலை தெரிவித்தார். இப்படியானவர்கள் செய்கின்ற வல்ல செயல்களால் இவ்வுலகு எவ்வித பலனையும் பெறாது என்று கூறிய ஆயர், நல்லவர்கள், பண்புள்ளவர்களால் மட்டும்தான் உலகை உருவாக்கமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

திருப்பலியின், முடிவில் மறைக்கல்விப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் ஆயர் அவர்களால் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டும், கேடயங்கள், கிண்ணங்கள், மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார்கள். வன்னிப் பிரதேசம் உட்பட மற்றெல்லா இடங்களிலிருந்தும் பெருந்திரளான மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பாக இடம்பெற்ற மேற்படி நிகழ்வை யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நிலையம் ஏற்பாடுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தகவல் : S.M.வுளோறன்ஸ்)

## யாழ்.மறைமாவட்...

கல்வியை பலாலி, சக்கோட்டை றோ.க.பாடசாலைகளிலும், உயர் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார். 2000ம் ஆண்டு புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் இணைந்த இவர் 2006 புனித சவேரியார் உயர் குருத்துவ கல்லூரியில் இணைந்து மெய்யியல், இறையியல் கற்றார். 2016 தை மாதம் 7ம் திகதி தியாக்கோன் பட்டம் பெற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை ஆனி மாதம் 25ம் திகதி காலை 9.00 மணிக்கு பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார். புதிய ஆயராக பொறுப்பேற்ற பின் எமது ஆயர் அவர்களால் திருநிலைப் படுத்தப்படும் முதலாவது குரு இவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "சமூகத்...

வெறும் குழுக்களை அமைக்கும் அமைப்பாகவும், சில பக்திமுயற்சிகளை, வழிபாடுகளை மேற்கொள்ளும் அமைப்பாக மட்டும் செயற்படமுயற்சித்ததால் அவற்றினால் எதிர்பார்க்கப்பட்ட பலனை அடைய முடியவில்லை. இவற்றிற்கு அப்பால் சென்று கவனிப்பாரற்று இருப்போருக்கு கைகொடுக்கும் வகையில் எமது விசுவாச செயற்பாடுகளை பிறர்நலப் பணிகளுக்காக செயற்படுத்தும் வழிமுறைகளைக் கையாளக்கூடிய அளவிற்கு அன்பிய அமைப்புக்கள் விழிப்புணர்வு கொள்ள வேண்டும்.

பல பங்குகளில் காணப்படும் உறங்குநிலை அன்பிய வாழ்வால் பயனேதும் இல்லை. அவற்றால் விசுவாசப் பணிவாழ்வை ஆர்வமுடன் எல்லோருக்கும் வழங்க முடியாது. அன்பிய வாழ்வில் எனது பணி என்ன என்பதை ஒவ்வொருவரும் தாமாகவே கேட்டுணர்ந்து செயற்படும் நிலை உருவாகும் வரை எம்மிடையே தொடர் புதுப்பித்தல் அவசியம். பங்கிலே எவரும் கவனிப்பாரின்றி விடப்படும் நிலை காணப்படக்கூடாது. ஒவ்வொருவருக்கும் உரிய பொறுப்பையும், உரிமையையும் வழங்குவதில் அன்பியங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதில் ஆர்வம் காட்டவேண்டும். அன்பிய சமூக வாழ்விற்கு ஒவ்வாத பாரம்பரிய முறைகளைத் தவிர்த்து, எல்லோரையும் சகோதரத்துவ உறவில் ஏற்று, பணிகளைப் பகிர்ந்தளிப்பதிலும், அன்புறவுடன் பணிகளை மனமுவந்து ஏற்று செயற்படுவதனூடாகச் செயலூக்கமுள்ள விசுவாச வாழ்விற்கு சான்று பகர்வதையுமே இலக்காகக் கொண்டு, அன்பியங்கள் பங்குத்தளங்களில் வளர்ச்சி பெற வேண்டும். இவற்றினூடாக சமுதாயத்தில் உருவாகும் பல சமூகத் தீமைகளை நாம் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

மேற்படி கருத்தமர்வில் மாதகல் பங்கில் உள்ள எல்லா ஆலயங்களையும் உள்ளடக்கிய கணிசமான மக்கள் பங்கேற்று தமது கருத்துக்களை சிறியோர், இளையோர், அன்னையர், தந்தையர் என்ற ஒழுங்கில் முன்வைத்தனர். நிறைகளை வளர்க்கவும், குறைகளை நிவர்த்தி செய்து புதுப்பித்தலுடன் கூடிய அன்புறவுச் சமூகத்தை உருவாக்குவதில் மக்கள் ஆர்வமாக விளங்கும் தன்மை குழுக்களின் கருத்துரையில் வெளிப்பட்டது. இம் மேய்ப்புப்பணிக் கருத்தமர்வின் ஒழுங்குகளை பங்குத்தந்தை அருட்பணி R.H.சகாயநாயகம் அவர்கள் சிறப்புற மேற்கொண்டதுடன் கருத்தமர்வினை நடாத்த ஒத்துழைத்த அனைவருக்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்தார் (தகவல் : S.M.வுளோறன்ஸ்)


## நீங்காத நினைவலைகளில் 4ம் ஆண்டு

உதயம் 16 – 11 – 1935



உதிர்வு 24 – 06 – 2012

அமரர்

### மேரி றீற்றா ஆசீர்வாதம் (றஞ்சிதம்)

"நாங்கள் காண்பவற்றையல்ல காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை; காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை"

(உரோ 14:8)

நிலையற்ற சொந்தங்களை விட்டு
நிரந்தர வாழ்வு தேடினீரோ
சுதந்திரக்காற்றை சுவாசிக்க
சொர்க்கவாசல் தேடினீரோ

நலமோடு நன்றாக நாம் வாழ
வளமான வாழ்வு தந்தவளே –அம்மா
நானிலம் விட்டு நீங்கள் சென்று
நான்காண்டு ஆனதுவே

நித்தியமாய் நின் ஆன்மா இளைப்பாற நிதமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மறந்திடமுடியா நினைவினில்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.

மாரீசன்கூடல்
இளவாலை.

Advt-64/16


## கிறிஸ்து அனுபவமில்லாமல் ...

எனவே இம் மாநாட்டிற்கான முக்கிய நோக்கத்தினை நாம் ஆழமாக உணர்ந்து செயற்பட வேண்டும். அதாவது "சான்று பகருதல்" என்னும் நோக்கிலிருந்து நாம் மாறுபடக்கூடாது. சான்றுபகர்தலின் அர்த்தத்தை நோக்குகையில் 'இயேசுவின் சீடராய் இருத்தல்', இந்நிலை மிகவும் கஷ்டமானதுதான். ஆனால் அதைத்தான் நாம் செய்ய அழைக்கப்படுகின்றோம். "இயேசு தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார். அவர்களும் வந்தார்கள். தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப் படவும்..." (மாற்கு 3:13-15) என்னும் நற்செய்தியை மேற்கோள் காட்டிய ஆயர் அவர்கள் சீடத்துவம் என்பது ஒரு விசேட அழைப்பு இதற் காகத்தான் உங்களையும் அவர் விரும்பி அழைத்துள்ளார். எனவே நீங்கள் ஏற்றுள்ள பணியைத் திறம்படச் செய்ய வேண்டுமாயின் இயேசுவோடு இருத்தல் அவசியம் என்பதை ஆயர் வலியுறுத்தினார். மேலும் அவரோடு இருந்து படிக்க வேண்டும். அவரது அனுபவத்தைப் பெறவேண்டும். இதைத்தான் அந்நாளில் சீடர்களும் பெற்றார்கள். தம்மிலே மாற்றத்தை உணர்ந்தார்கள். உலகெங்கும் சென்று துணிவோடு நற்செய்தியை அறிவித்து, சான்றும் பகர்ந்தார்கள்.

இன்று எம்மத்தியிலே எழும் பல பிரச்சினைகளுக்குக் காரணம் கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவோடு இல்லை. கிறிஸ்துவோடு இருக்காதவர்களால் சான்றுபகர முடியாது. இதனையே மேய்ப்புப்பணி மாநாட்டிற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் மக்களை உணரச் செய்ய வேண்டும். எம் சமகாலச் சூழலில் யாராவது நல்லது செய்து முன்னுக்கு வர முனைந்தால் அவர்களை முன்னேற விடாது பின் நோக்கித் தள்ளிவிடும் மனப்பாங்கில் வாழும் சமூகத்தையே இன்று காண்கின்றோம். இந்நிலை எம்மத்தியில் மாற வேண்டும். "தேடிக்காப்பாற்றும் பணியே திருச்சபையின் பணி" இதனை நாம் மறந்து தவறிழைக்கின்றோம். எங்கெங்கு தேவையில் இருக்கும் நபர்களை, கிறிஸ்துவோடு இணைய, அவரோடு இருக்க ஆவல் கொள்ளும் மக்களை நாம் தேடிச் செல்ல வேண்டும். அதுவே எம் சான்று பகர்தலுக்கு முதற்படியாக அமைய வேண்டும். மேலும் ஒவ்வொரு தலைவனும் பல தலைவர்களை உருவாக்க வேண்டும். அதுவே உண்மையான சீடத்துவம். ஆனால் இப்பண்பு இன்று எம் சமூகத்தில் இல்லை. இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில் நாம் எவ்வாறான வாழ்வினைக் கைக்கொள்வோம் என்ற சிந்தனை எப்போதும் எம் மனதில் துளிர்க்க வேண்டும். எனவே அர்ப்பணிப்போடு பணிக்காக முன்வந்துள்ள நீங்கள் இயேசுவோடு இருந்து, அவரோடு படித்து, அவரையே அனுபவித்து மற்றவர்களுக்குக் கொடுக்கும் சான்றுள்ள வாழ்வைப் பின்பற்றி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தமது ஆழமான கருத்தினை வளவாளர் மத்தியில் முன்வைத்தார்.

இச் செயலமர்விற்கு யாழ் மறைமாவட்டத்தின் ஐந்து மறைக்கோட்டங்களில் இருந்தும் அதன் குருமுதல்வர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், பொது நிலையினர் என 55இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர். பின்னர் பங்குத் தளங்களில் நடாத்தப்படவிருக்கும் செயலமர்வுச் செயற்பாட்டு விளக்கம் குருமுதல்வர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு கருத்தமர்வானது காலை 11.30 மணியளவில் நிறைவு பெற்றது.

## முன்னைய நாட்களைப்போல குருக்கள், துறவிகளின் பணிகள் கவர்ச்சிகரமாக இல்லை!

இளவாலை புனித யாகப்பர் பங்குமக்களின் அவதானிப்பு

யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் பங்குக் கருத்தமர்வு கடந்த 12ஆம் திகதி இளவாலைப் பங்கில் நடைபெற்றது. புனித. யாகப்பர் ஆலயமக்கள் எமது மறை மாவட்டத்தின் புதுப்பித்தல் பற்றி தங்கள் கருத்துக்களை முன்வைத்தபோது, இன்று மந்தைகள் வழிதவறிச் செல்வதற்கு கவர்ச்சியில்லாத துறவற சபைகளினதும், ஈடுபாடில்லாத குருக்களினதும் மந்தமான பணிகளும் ஒரு காரணம் என்று சுட்டிக்காட்டினார்கள்.

குருக்கள், துறவிகளின் ஆர்வமில்லாத செயற்பாடுகளால் இன்று பலர், குறிப்பாக இளைஞர், யுவதிகள், சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள், குருக்கள் துறவிகளுக்குப் பணிந்து தலை சாய்க்கும் சமூகம் இன்னும் மங்கிவிடவில்லை என்றும் குறிப்பிட்டார்கள்.

மக்களோடு மக்களாகக் கரைந்து பணியாற்றிய முன்னைய காலத்துக் குருக்கள், துறவிகளை நன்றியோடு நினைவு கூருகின்ற இந்த மக்கள் அப்படியான ஒரு காலம் மீண்டும் வராதா என்ற ஏக்கத்தோடு இருப்பதை அவதானிக்கமுடிந்தது.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2016ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.